# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.142/2025** |
| Deposition of witness | : | P.W.1 |
| Name | : | பன்னீர் செல்வம் |
| Father's /Husband Name | : | அந்தோணிசாமி |
| Village | : | ஆழியன் தோப்பு, செம்பியன்கூந்தலூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 52 |
| Occupation | : | விவசாயி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 01st day of November 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது ஆழியன் தோப்பு செம்பியன் கூந்தலூரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார். கடந்த 16.06.2025 ம் தேதி மாலை 05.00 மணியளவில் நான் எனது வீட்டின் கொல்லையை சுத்தம் செய்வதற்காக சென்றேன். அப்போது எனது கொல்லைப்புறம் செல்லும் பாதையில் காட்டுக்கருவை முள் வெட்டி போடப்பட்டிருந்தது. அதை நான் எடுக்க போகும் போது அப்போது ஆஜர் எதிரி ரூபிலா ஏன் அந்த முள்ளை எடுக்குற என்று சொல்லி குச்சிகாரி மகனே, தேவிடியா மகனே என அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, மறைத்து வைத்திருந்த அரிவாளால் எனது தலையில் வெட்டினார். அதில் எனக்கு பலமான காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி அரிவாளை வைத்துக்கொண்டு கொல்லாமல் விடமாட்டேன் என்றும் குடும்பத்தை அறுத்துவிடுவேன் என்றும் அரிவாளை வைத்துக்கொண்டு மிரட்டினார். அவ்வாறு மிரட்டியதால் எனக்கு மிகவும் மனஉளைச்சல் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக ரிக்கிபாண்டி என்பவரது ஆட்டோ மூலம் சிகிச்சைக்காக எனது மனைவி கலா மற்றும் ஜேக்கப், ராஜேஷ் ஆகியோர்

உதவியுடன் நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு மருத்துவர் எனக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்காக ஆறு தையல் போட்டார்கள். (சாட்சி தனது காயத்தை காட்டி சாட்சியம் அளிக்கிறார்.) மேல்சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது எரவாஞ்சேரி போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்த விபரத்தை போலீசாரிடம் சொன்னேன். அதை போலீசார் எழுதி கொண்டு படித்து காண்பித்தார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எரவாஞ்சேரி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.01 13:06:54 +05'30'

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.